DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C.No. 123/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சீராளன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.பாலு |
| Village | : | ஆலம்பாடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A2. A3. A4 are present. A1 absent U/s317 Cr.P.C petition filed heard and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 08.05.2024

---

**முதல் விசாரணை**

1. நான் ஆலம்பாடி கிராமத்தில் வசித்து பூசாரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர்கள்.

2. 09.09.2017ம் தேதி எங்கள் வீட்டு வேலியை எதிரிகள் தீ வைத்து கொளுத்தியுள்ளார்கள் அதை கேட்டற்கு எனது மனைவியை போடி வாடி என்றும் ஜாதியை பற்றி பேசியும் தரக்குறைவாக பேசியுள்ளார்கள். அன்று நான் கோவில் வேலைக்கு சென்றிருந்தேன். இரவு நான் வீட்டிற்கு வந்தவுடன் எனது மனைவி நடந்தை கூறினார்.

3. நான் சம்பவம் நடந்த மறுநாள் காலையில் எதிரிகளிடம் எதற்காக இப்படி செய்தீர்கள் என்று கேட்டதற்கு என்னையும் தரக்குறைவாக பேசினார்கள். எதிரி கார்த்திக் எனது மனைவியையும் எனது மகளையும் கம்பியாலும், அருவாளாலும் தாக்கியுள்ளார்கள். அதில் எனது மனைவிக்கு வலது கையில் வெட்டுக்காயமும், எனது மகளுக்கு இடது கையிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது.

4. நான் கொல்லை வாசலில் நின்று சண்முகப்பிரியா மற்றும் பூரணத்திடம் பேசிக்கொண்டிருந்தேன். சத்தம் கேட்டு நான் பின்னால் வாசலில் இருந்து முன்வாசல் வந்து பார்த்தபோது எனது மனைவி மற்றும் மகள் அடிபட்டு கிடந்தார்கள். என்னை எதிரிகள் கல்லை கொண்டு தாக்கினார்கள் நான் பாத்ரூமில் சென்று ஒளிந்து கொண்டேன். என்னை பார்த்து அழிக்காமல் விடமாட்மடேன் என்று எதிரி கார்த்தின் என்னை மிரட்டினார்

5. பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் நான் எனது மனைவி, எனது மகள் ஆகியோர்கள் திருவாடானை அரசு மருத்துவமனைக்கு கொண்டு அவர்களை சிகிச்சையில் சேர்த்தேன். பின்னர் இது சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன்

6. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து

என்னுடையதுதான் **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் புகாரை நான் தான் எழுதினேன்.

2. புகாரை மருத்துவமனையில் வைத்து எழுதினேன். எனது மனைவி, மகள் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்து அவர்களிடமும் எழுதி வாங்கினார்கள். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள்.

3. போலிசார் என்னை விசாரித்து நான் எழுதி கொடுத்ததை வாங்கிக் கொண்டு எழுதாத வெள்ளை தாளில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அந்த கையெழுத்து தான் தற்போது என்னிடம் காட்டப்பட்ட கையெழுத்து என்றால் சரிதான்.

4. எங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே பாதை சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றும் அதனால் இருவரும் பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் பேசிக்கொள்வோம். வேலியில் யார் நெருப்பு வைத்தார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை.

5. எதிரிகளை நான் தாக்கயிதாக என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கு எண் STC 31/2023 ஆகும். இந்த வழக்கில் சாட்சி காளியம்மாள் எனது மனைவி ஆவார். சாட்சி ரோகினி எனது மகள் ஆவார்.

6. துரைக்கண்ணு, கருப்பையா ஆகியோர்கள் எங்கள் ஊர்க்காரர்கள் ஆவார்கள். சம்பவம் நடந்த எங்கள் வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டின் அருகில் இருந்தவர்களை விசாரித்தால் சம்பவம் நடந்தது பற்றி தெரியவரும் என்றால் யாரும் இல்லை.

7. எதிரி கார்த்தி எனது மகள் மற்றும் மனைவியை தாக்கிய சமயத்தில் நான் அந்த இடத்தில் இல்லை. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய் புகார் அளித்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. எனது மகளுக்கும், மனைவிக்கும் வேறு விதமாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது புாகர் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளை தாக்கிய வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C.No. 123/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.காளியம்மாள் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.சீராளன் |
| Village | : | ஆலம்பாடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A2. A3. A4 are present. A1 absent U/s317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 08.05.2024

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் ஆலம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும் எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி கார்த்திக்கை

எனக்கு தெரியும். எதிரிகள் வீடும் எங்கள் வீடும் பக்கத்து வீடு ஆகும்.

2. எங்கள் வீட்டை சுற்றி நாங்கள் வேலி அமைத்துள்ளோம். அதில் எதிரிகள் குப்பையை அள்ளிபோட்டு கொளுத்தினார்கள். அன்று எனது வீட்டுக்காரர் வீட்டில் இல்லை பூசாரி என்பதால் கோவில் பணிக்கு சென்றுவிட்டார்.

3. நான் போய் கேட்டபோது அப்படிதான் கொளுத்துவோம் என்றும் எதிரி சண்முகம் என்னை தரக்குறைவாக மரியாதை இல்லாமல் பேசி என்னை போடி வாடி, கண்டார ஓழி என்றும் கொசமுண்டை, கொசமுண்டை என அசிங்கமாக பேசினார்.

4. எதிரி கார்த்திக் என்மீது கல்லை கொண்டு வீசவும் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். இரவு எனது கணவர் வீட்டிற்கு வந்தபிறகு நான் நடந்ததை அவரிடம் கூறினேன். சம்பவம் நடந்த மறுநாள் காலையில் இது பற்றி எனது கணவர் எதரிகளை கேட்டபோது செடிகள் எல்லாம் தீ வைத்ததில் வாடி விட்டன.

5. இப்படி எதற்கு தீ வைத்தீர்கள் என்று கேட்டதற்கு எனது கணவரை அசிங்கமாக பேசியுள்ளார்கள். பார்த்துக் கொண்டிருந்த என்னையும் எனது மகளையும் எதிரி கார்த்திக் கம்பி கொண்டு தாக்கினார். பின்னர் அருவாளைக் கொண்டு தாக்கியதில் எனது வலது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது (சாட்சி காயத்தழுப்பை காண்பிக்கிறார்). அதை தடுக்க வந்த எனது மகளுக்கும் இடது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது.

6. நாங்கள் இருவரும் மயங்கி விட்டோம் பின்னர் எனது கணவர் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து எங்களை திருவாடானை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். எனது கணவர் இது சம்பந்தமாக

காவல் நிலையத்தில் புகார் அளித்த விவரமும் எனக்கு தெரியும். நாங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் அங்கு வந்து எங்களை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சம்பவ சமயத்தில் நான் எங்கள் வீட்டின் கொல்லை வாசலில் இருந்தேன். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

2. நாங்கள் இரும்பு கம்பி வலையால் தான் வேலி அமைத்திருந்தோம். அது எரிந்து கொண்டிருந்தது அதில் செடிகள் வாடிபோய்விட்டன. இந்த விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. போலிசார் என்னை காவல் நிலையத்தில் வரவழைத்து விசாரித்தார்கள். மருத்துவமனையில் மருத்துவரிடம் சிகிச்சை சமயத்தில் நான்கு தெரிந்து நபர்கள் தாக்கியதாக தான் தெரிவித்தேன் அவர்கள் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எங்களை தாக்க பயன்படுத்திய ஆயுதங்களை போலிசாரிடம் காண்பித்தோம் அவர்கள் வாங்கிக் கொண்டு செல்லவில்லை. நான் எதிரிகள் தீ வைத்ததை நேரடியாக பார்த்தேன். எதிரிகள் தீ வைத்தது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை

5. எதிரிகளை தாக்கியதாக எனது கணவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகளுக்கும், எனக்கும் வேறு விதமாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது எனது கணவர் புகார்

அளித்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் எதிரிகளை தாக்கிய வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காக அவர் அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் சொன்னதுபோல, சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் ஏற்கனவே எங்களுக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய் எனது கணவர் அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.